# செய்திகளும் குறிப்புகளும்

**16.05.2024, ஆரோவில்வாசிகளுக்கான தமிழ் வார ஏடு, ஆரோட்ரடுக்ஷன், எண்: 1056**

---

**ஸ்ரீ அரவிந்தர் - மனித சக்கரம்** (Human cycle)

**16. வாழ்க்கையின் பகுத்தறிவு கடந்த கடைசி முடிவு**

அவனுடைய சிந்தனையிலும், ஜீவனிலும் முழுக்க முழுக்க பிராணத்தன்மை கொண்டவனாக இருக்கின்றான். பிற அனைத்தும் அவனுடைய வாழ்க்கையின் மற்றும் பண்பாட்டின் மென்மலராக உள்ளன. மற்றபடி இதுதான் அதனுடைய வேரும் அடிமரமாகவும் உள்ளது, மேலும் நவீன காலங்களில், எப்பொழுதும் இருந்துவரும் அவனுடைய இந்த மனப்போக்கின் உண்மை, வலியத்தாக்கும் தன்மையுடன் மேலெழுந்து. கிறித்தவக் கடமைப்பற்று மரபின்மீதும் மற்றும் இலத்தீனியப் பண்பாட்டின் மீதும் வெற்றி பெற்றது.
பிராணசக்தியார்ந்த மனிதனின் இந்த வெற்றிகரமான வெளிப்பாடும், அவனது தலைமையும் மற்றும் அவனுடைய நோக்கங்களும் தான் 19- நூற்றாண்டின் மிகப்பெரிய பொருளாதார மற்றும் அரசியல் நாகரிகத்தின் உட்கருத்தாக இருந்துள்ளது. சமுதாயத்தின் வாழ்க்கை மனிதனுடைய நடைமுறை இயலறிவுகளுக்காக மூன்று செயற்பாடுகளை உடையதாக உள்ளது, மனிதனின் குடும்ப மற்றும் சமுதாய வாழ்க்கை, சமுதாயம் என்பது அவனுக்கு சமூகத்தில் மற்றவர்களுடன் தனிமனிதனாக மற்றும் பல குடும்பங்களின் ஒரு குடும்பத்தினன் என்ற இரு வகையிலும் வரும் உறவுகள் என்ற பொருளுடையது ஓர் உற்பத்தியாளனாக, செல்வம் சேர்ப்பவனாக மற்றும் நுகர்வோனாக அவனுடைய பொருளாதார நடவடிக்கைகள், மற்றும் அவனுடைய அரசியல் அந்தஸ்து மற்றும் செயற்பாடு இவைகள். சமுதாயம் இந்த மூன்று விஷயங்களின் அமைப்பாகும், மேலும் அடிப்படையில் நடைமுறை மனிதனுக்கு சமுதாயம் என்பது இவ்வளவேதான், வேறெதுவுமில்லை. கல்வி மற்றும் விஞ்ஞானம், பண்பாடு, நன்னெறி, அழகுணர்வு, இவை வாழ்க்கையின் வழிகாட்டலுக்கும் மற்றும் மேம்பாட்டிற்கும் அதனுடைய அணிகலனாகவும், அதனுடைய உழைப்புகள், இடர்ப்பாடுகள், துக்கங்களில் ஆறுதலுக்கும் வாழ்க்கைக்கு உதவுவனவென்று அவற்றின் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அவை அதன் ஆக்கப்பொருளில் ஒருபகுதி அல்ல, அதனுடைய இன்றியமையாத இலக்குகளில் எதிலும் தோன்றுவதில்லை. வாழ்க்கை தானும், வாழவேண்டும் என்ற ஓர் இலக்கை மட்டுமே, உடையதாகிறது, வாழ்வதன் நோக்கம் வாழ்க்கையே என்றாகிறது.


பண்டைக் காலத்தவர் இதற்கு மாறான, உண்மையில், இதற்கு நேர் எதிரிடையான கருத்துடையவர்களாய் இருந்தனர். முதற் செயற்பாடுகளின் அளப்பரிய இன்றியமையாமையை அவர்கள் ஒப்புக் கொண்ட போதிலும் - மிகவும் சமுதாயத்தன்மையான ஆசியாவிலும் மிகவும் அரசியல்தன்மையான ஐரோப்பாவிலும் - அனைத்துச் சமுதாயமும் எவ்வாறேனும் வாழ்ந்திட மற்றும் செழுமையடைய இதை ஒப்புகொண்டேயாகவேண்டும் - இவை அவர்களுக்கு இந்த வார்த்தையின் மேம்பட்ட அர்த்தத்தில் முதன்மையானதாக இருக்கவில்லை; அவை மனிதனுடைய முதல்தொழில், ஆனால் முக்கியத்தொழில் அல்ல. பண்டைக்காலத்தவர் இந்த வாழ்க்கையைப் பகுத்தறிவு ஜீவனின், நன்னெறி ஜீவனின், அழகுணர்வு ஜீவனின், ஆன்மீக ஜீவனின் வளர்ச்சிக்கு ஒரு வாய்ப்பாகக் கருதினர். கிரேக்கமும் உரோமும் முதல் மூன்றை மட்டுமே வற்புறுத்தின, ஆசியா மேலும் சென்றது, இவற்றையும் கீழ்ப்படுத்தியது, மேலும் இவற்றை ஆன்மீக முழுநிறைவேற்றத்திற்குப் படிக்கற்களாகவே கண்டது. கிரேக்கமும் உரோமும் அவற்றின் கலை, கவிதை, தத்துவத்தைப் பற்றி மிகப் பெருமைப்பட்டன; மேலும் இவற்றை அவர்களுடைய அரசியல் - சுதந்தரம் அல்லது பெருமையைப் போலவே அல்லது அதைவிட அதிகமாகப் பேணியது. ஆசியாவும் இந்த மூன்று சக்திகளையும் உச்சத்தில் வைத்தது. மேலும் அவளுடைய சமூக அமைப்பை மட்டுமீறிய அளவில் மதிப்பிட்டது. ஆனால் அவற்றைவிடப் பன்மடங்கு உயர்வாக அவளுடைய அடியார்கள், மத ஸ்தாபகர்கள் மற்றும் சிந்தனையாளர்களை, அவளுடைய ஆன்மீக தீரர்களைப் போற்றியது. நவீன உலகம் அதனுடைய பொருளாதார அமைப்பு. அதனுடைய அரசியல் சுதந்தரம், ஒழுங்கு மற்றும் முன்னேற்றம், அதனுடைய சமுதாய மற்றும் குடும்ப வாழ்க்கையின் இயக்கமுறை, சவுகரியம் மற்றும் சுகம் அதனுடைய விஞ்ஞானம், ஆனால் பெரும்பாலும் அதனுடைய நடைமுறை வாழ்க்கையில் பயன்படும் விஞ்ஞானம், பெரும்பாலும் அதனுடைய கருவிகளுக்காக மற்றும் வசதிகளுக்காக, அதனுடைய இருப்புப் பாதைகள், தந்தி, நீராவிக்கப்பல்கள், அதன் எந்திரங்கள் மற்றும் அதனுடைய ஆயிரக்கணக்கான கண்டுபிடிப்புகள், மனிதனுக்குத் தூல உலகை ஆள உதவும் எண்ணற்ற புதிய சாதனங்கள் இவற்றைக் குறித்து மிகவும் பெருமைப்படுகின்றது. இது இந்த இரண்டு மனப்போக்குகளின் வேறுபாட்டையும் எடுத்துக்காட்டுகிறது.

இது முக்கியமானது, பல விஷயங்கள் இதைச் சார்ந்துள்ளன. ஏனென்றால் சமுதாயம் பற்றிய, வாழ்க்கை பற்றிய நடைமுறையான, பிராணத்துவமான கண்ணோட்டம் சரியானதெனின், சமுதாயம் முக்கியமாக அதனுடைய இனத்தாரின் பராமரிப்பு, வசதி, பிராணத்துவ இன்பம் மற்றும் அரசியல் மற்றும் பொருளாதாரத் திறமைகளுக்காகவே இருக்குமெனில், அதன்பிறகு, வாழ்க்கை கடவுளுக்கான மற்றும் அந்த மிக உயர்ந்த ஆன்மாவிற்கான நாடல், மேலும் சமுதாயம் கூட ஒருநாள் அதைத் தன் கொள்கையாகக் கொள்ளவேண்டும், என்ற நம்முடைய கருத்து நிற்காது. எவ்வாறாயினும் நவீன சமுதாயம் தன்னுடைய தன்னுணர்வுள்ள இலட்சியத்தில் அத்தகைய எந்த முயற்சியிலிருந்தும் தொலைவிலேயே இருக்கிறது; அதனுடைய சாதனையின் சீர்சிறப்பு எதுவாயினும் அது இரண்டே இரண்டு கடவுளரை மட்டுமே ஏற்றுக்கொள்கிறது. உயிர் வாழக்கை, மற்றும் விஞ்ஞானம் என்ற பெயரில் ஒழுங்குபடுத்தப்பட்ட நடைமுறைப் பகுத்தறிவு. ஆகையால் உயிர்சக்தி மற்றும் அதன் வெளிப்பாடுகள் எனும் இந்த முதல் நிலையான பெரும் விஷயத்தைப் பற்றி, நாம் அது அதன் உண்மையில் என்னவாக இருக்கிறது மற்றும் அதேபோல, அது தன் தோற்றத்தில் எவ்வாறு இருக்கிறது என்பதைத் தனிப்பட்ட கவனத்துடன் பார்க்க வேண்டும். அதனுடைய தோற்றம் நமக்குப் போதுமான அளவு நன்குதெரிந்ததே, ஏனென்றால் நம்முடைய நித்திய வாழ்க்கையும் அதன் நிகழ்கால வடிவமும் அந்தப் பொருளால்தான் ஆக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய முக்கிய குறிக்கோள்கள் தனிமனிதனின் மற்றும் சமுதாயத்தின் தூல நலம் மற்றும் பிராண நலம் ஆகும்; உடல் ஆரோக்கியம், நீண்ட ஆயுள், வசதிகள், ஆடம்பரம், செல்வம், வேடிக்கை, பொழுதுபோக்கு, இந்த விருப்பங்களின் முழுமையான திருப்தி; மனத்தையும் மற்றும் இயங்காற்றல் உள்ள உயிர்விசையையும் செல்வம் ஈட்டும் வேலைகளில் மற்றும் உற்பத்தியில் இடையறாது மற்றும் சோர்வுறாது செலவிடல், மேலும் இந்த அமைதியற்ற மற்றும் விழுங்கும் சக்தியின் உயர்ந்த தீநாக்குகள் கொழுந்து விட்டு மேலெழுகையில் பலவகைப்பட்ட படைப்புகள் மற்றும் வெற்றிகள், போர்கள், படையெடுப்புகள், குடியேற்றங்கள், கண்டுபிடிப்பு, வாணிபவெற்றி, பயணம், வீரதீரச்செயல், பூமியை முழுதுமாக உடைமையாக்குதல், மற்றும் பயன்படுத்துதல் முதலியன. இந்த வாழ்க்கையனைத்தும் இன்னமும் அதனுடைய அமைப்புகளுக்கு முன்பே இருந்துவரும் வடிவங்களையே, குடும்பம், சமுதாயம், நாடு, இவற்றையே கொண்டுள்ளன; மேலும் அது இரண்டு உள்ளுந்துதல்களை உடையது, தனிமனிதனுடையது மற்றும் கூட்டுத்தன்மையது என்பனவே அவை.

வாழ்க்கையின் முதல் உள்ளுந்துதல் தனிமனிதத்தன்மையானது; மேலும் அது குடும்ப, சமுதாய மற்றும் தேசிய வாழ்க்கையை, பிராணத்துவ தனி மனிதனின் அதிகப்படியான திருபதிக்கான ஒருவழி வகையாக ஆக்குகிறது. குடும்பத்தில் தனிமனிதன் உடைமைப்படுத்துதல் என்னும் பிராண இயலறிவின் திருப்தியை நாடுகிறான். உடனொத்ததாகவே தோழமை இன்பத்தையும் மற்றும் அவனுடைய வேறொரு பிராண இயலறிவான தன்னினப்பெருக்கத்தின் நிறைவேற்றத்தையும் நாடுகிறான்.
அவனுடைய ஆதாயங்கள் அவனுடைய உடைமைகளான, மனைவி, பணியாட்கள், வீடு, செல்வம், விளை நிலங்கள், அவனுடைய சந்ததியின் உடலிலும் மனத்திலும் தன்னில் பெரும்பகுதியைப் பெருக்கிக்கொள்ளுதல் ஆகும். *(தொடரும் .....)*

## அறிவிப்புகள் (Announcements)

Savitri BHAVAN



### கனவு தெய்வீகம் தொடர் (Dream Divine Series)

குறிப்பாக புதிதாய்ச்சேர்ந்தவர்களுக்கு (நியூகம்மர்) வழிகாட்டுவதற்கு **கனவு தெய்வீகம் தொடர்** ('தி ட்ரீம் டிவைன் சீரிஸ்') என்ற திட்டத்தை சாவித்ரி பவன் அறிமுகப்படுத்தியுள்ளது. ஆரோவில்லின் நோக்கங்களையும் இலட்சியங்களையும் புதிதாய்ச்சேர்ந்தவர்கள் (நியூகம்மர்) புரிந்துகொள்வதும், ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை ஆகியோரின் வாழ்க்கை மற்றும் படைப்புகள், பூரண யோகம் ஆகியன பற்றி அறிந்து கொள்வதும், இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். புதன்கிழமைதோறும் மாலை 4.30-5.30 மணிக்கு வாராந்திர அமர்வு நடைபெறும். இந்தத் தொடரில் விளக்கக்காட்சிகள், திரைப்படங்கள், உரைகள் போன்றவை அடங்கும், அதைத் தொடர்ந்து கேள்விகள், பதில்கள் அமர்வு.

**மே 22 புதன்கிழமை மாலை 4:30 - 5:30 மணிக்கு,**

**Matrimandir: Honoring Piero Cicionesi (Part 1)**

**சாவித்ரி பவனில் உள்ள சங்கம் ஹாலில் வீடியோ ஒளிபரப்பப்படும்.**

அனைவரும் வருக.

---

### ஆரோவில் பஞ்சர் சர்வீஸ்

அன்பார்ந்த நண்பர்களே,
ஆரோவில் பஞ்சர் சர்வீஸ் ஊழியர்கள்/பணியாளர்கள் மே 20 முதல் மே 23 வரை கோடை விடுமுறையில் செல்கிறார்கள்.
எனவே, இந்த சேவை வரும் மே 24ம் தேதி மீண்டும் திறக்கப்படுகிறது.
தங்கள் புரிதலுக்கு நன்றி.
*வாழ்த்துக்கள். ஆறுமுகம் D.*


---

### கோடையில் ஆரோவில் நூலக நேரம் (Summer Opening Timings:)

காலை - திங்கள் - சனி: 9 - 12 மணி வரை.
பிற்பகல் - செவ்வாய், வியாழன், சனி: 4 - 6.30 மணி வரை.

---

### ஆம்பித்தியேட்டர் - மாத்ரிமந்திர் (AMPHITHEATRE – MATRIMANDIR)



**கோடை மாதங்களில், சுனிலின் இசையில் ஸ்ரீ அன்னை அவர்கள் வாசித்த சாவித்திரிக்கு பதிலாக சுனிலின் அழகான புத்தாண்டு இசையும், அத்துடன் ஒவ்வொரு முறையும் சுனில் இசையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஸ்ரீ அன்னை அவர்கள் வாசித்த பல்வேறு பிராத்தனைகளுடன் தியானம்.**

**மார்ச்சு 14 முதல் வியாழன்தோறும் சூரிய அஸ்தமனத்தில் மாலை 6.00 முதல் 6.30 வரை.**
நாங்கள் சூரியன் அஸ்தமனமாகும் நேரத்தை பின்தொடர்கிறோம், பருவகாலத்திற்கு ஏற்ப நேரம் மாறுகிறது.

ஆரோவில்லின் மையத்தில் உள்ள அழகிய திறந்தவெளியில், மகத்தான சூரிய அஸ்தமனத்தில், பரலோக இசையைக் கேட்டு மகிழுங்கள்!

*அனைவருக்கும் நினைவூட்டுகிறோம்:* ஒருமைப் பூங்கா (ஃபார்க் ஆஃப் யுனிட்டி) அமைதி, தியானம், அகப்பணிக்கான இடமாகும், ஆகவே, இந்த இடத்தை இதற்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்: கேமராக்கள், ஐ-பேடுகள், செல்போன்கள் போன்றவற்றைப் பயன்படுத்தக்கூடாது. புகைப்படங்கள் கூடாது.
அன்பான விருந்தினர்களே, உங்கள் விருந்தினர் அட்டையை உங்களுடன் எடுத்து வரவும். மாலை 5.45 மணி முதல் ஆம்பித்தியேட்டருக்கு மட்டுமே செல்ல முடியும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.
நன்றி, *ஆம்பித்தியேட்டர் அணி சார்பில் சூர்யா*

---

**மல்டிமீடியா சென்டர் - சினிமா பேரடைஸோ, மே 20 திங்கள், இரவு 8:00 மணி:**
**• ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்**
இந்தியா, 2023, எழுத்தாளர்-இயக்குனர். கார்த்திக் சுப்பராஜ். நடிப்பு- ராகவா லாரன்ஸ், எஸ்.ஜே. சூர்யா, நிமிஷா சஜயன், மற்றும் பலர், ஆக்ஷன்-நகைச்சுவை, 182 நிமிடம், தமிழ்த் திரைப்படம். ஆங்கில துணை வாசகங்கள் அனைவருக்கும் ஏற்றது.

1970களில் அமைக்கப்பட்ட அல்லியஸ் சீசர் மதுரையில் ஒரு பிரபலமான கேங்க்ஸ்டர் மற்றும் ஜிகர்தண்டா கிளப்பின் தலைவர் (நகரத்திலிருந்து பிரபலமான பானத்திற்குப் பிறகு). அவர் கிளின்ட் ஈஸ்ட்வுட்டின் தீவிர இரசிகராவார் மற்றும் ஈஸ்ட்வுட் பாணியில் கலைஞராக வெளிவர விரும்புகிறார். சத்யஜித் ரேயின் உதவியாளராகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் ரே தாஷனை சீசர் தனது முதல் படத்திற்கு அமர்த்துகிறார். ஆனால் தாசனுக்கு வேறு நோக்கங்கள் உள்ளன. சற்று நீளமான படம். ஆனால் பாராட்டைப் பெற்ற படம்.

---

**மல்டிமீடியா சென்டர் அறிவிப்பு** (Announcement From Multimedia Center)

அன்பார்ந்த அனைவருக்கும்:
2024 ஜூனில் ஆரோஃபிலிம் குழுவிற்கு விடுமுறை ஆகும். எனவே வெள்ளிக்கிழமை தோறும் காண்பிக்கப்படும் ஆரோஃபிலிம் திரைப்படக்காட்சி ஜூன் மாதம் கிடையாது.
எனவே, 2024 ஜூன் 7, 14, 21, 28 ஆகிய வெள்ளிக்கிழமைகளிலும், 26.07.2024 அன்றும் மாலை நிகழ்ச்சிகளை நடத்த முன்பதிவு செய்து கொள்ள விரும்பும் குழுக்கள் அல்லது தனிநபர்கள் முன்பதிவு செய்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, நிகழ்ச்சி மாலை 5 மணிக்குத் தொடங்கி இரவு 7:30 மணிக்கு நிறைவு செய்வதற்கு நீங்கள் திட்டமிடலாம். நிகழ்ச்சி இரவு 9:30 மணிக்கு முடிந்தாலும் நன்று.
அதே முன்பதிவு செயல்முறைதான். உங்களுக்கு ஆர்வமிருந்தால், நீங்கள் உத்தேசித்துள்ள நிகழ்ச்சிக்கான நாள், நிகழ்ச்சியின் தொடக்க மற்றும் நிறைவு நேரத்தை முடிவு செய்து, mmcauditorium@auroville.org.in என்ற மின்னஞ்சலுக்கு எழுதி அது குறித்து விசாரிக்கலாம், உங்களது மின்னஞ்சலுக்கு நாங்கள் பதிலளிப்போம்.
நன்றி, வாழ்த்துக்களுடன் - மல்டிமீடியா மையக் குழு (எம்எம்சி)

---

**துணை செயலாளரின் அலுவலகம் /ஓஎஸ்டி(விவி)**
**பும்கியா ஹால் ஆரோவில் பவுண்டேஷன்**
**ஆரோவில், தமிழ்நாடு-605006**

---

**எண்**.105/OSD/F&GB/UF/2024/01 — **தேதி**:10/05/2024

**அறிவிப்பு**

ஆரோவில் பவுண்டேஷன் செயலர் அவர்கள், ஆரோவில்லில் வசிப்பவர்கள் கூடும் பொது இடத்தில், ஆரோவில் பவுண்டேஷனின் குடிமக்களுக்கு அனைத்து விஷயங்களிலும் உதவி/உதவி மற்றும் வசதிகளை வழங்குவதற்காக, ஒரு உதவி மையத்தை அமைக்குமாறு துணைச் செயலர்/ஓஎஸ்டி(விவி)க்கு உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, சோலார் கிச்சனில் (உணவுக்கூடம்) **நண்பகல் 12:00 மணி முதல் 1.30 மணி வரை**, சிறப்புப் பணி அதிகாரி (பொது மக்கள் தொடர்பு மற்றும் பண்ணை நடவடிக்கைகள்), துணைச் செயலர் (OSD) (VV) அலுவலகப் பணியாளர்கள், மற்றும் ஆரோவில் சமூகத்தின் பிரதிநிதிகள், அதாவது செயற்குழு, எஃப்ஏஎம்சி, ஏடிடிசி ஆகிய ஒவ்வொரு குழுவில் இருந்தும் ஒரு உறுப்பினர் ஆகியோர் அடங்கிய ஒரு உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழு உறுப்பினர்கள் வார நாட்களில் நண்பகல் 12:00 மணி முதல் 1.30 மணி வரை சோலார் கிச்சனின் வரவேற்பு பகுதியில் அமர்ந்திருப்பார்கள்.

எனவே, ஆரோவில் பவுண்டேஷனின் பல்வேறு பிரிவுகளில் நிலுவையில் உள்ள விஷயங்கள், அரசாங்கத்தில் உள்ள பிற விஷயங்கள் மற்றும் வழிநடத்துதல் அல்லது வழிகாட்டுதல் தேவைப்படும் பிற குறைகளை தீர்வுகாண அனைவரும் உதவி மையத்தை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

B. ராமகிச்செனின் @ பாலகாந்தி
சிறப்புப் பணி அதிகாரி (PR&FA)

---

**எதிர்காலத் திறன்கள் மற்றும் ஒருங்கிணைந்த ஆளுமை மேம்பாட்டிற்காக ஏஐஏடி-யில் பயிலவும்**
(Study at AIAT for skills of the future and integral personality development)

ஆரோவில் இன்ஸ்டிடியூட் ஆப் அப்ளைடு டெக்னாலஜி, 10+2 அல்லது அதற்கு சமமான வகுப்பில் தேர்ச்சி பெற்ற இப்பகுதியைச் சேர்ந்த ஆரோவில்வாசிகள் மற்றும் ஆரோவில்வாசி அல்லாத இளைஞர்களுக்கு இளங்கலை பட்டப்படிப்பை (B.Voc) பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்துடன் இணைந்த தொழில்முறை பொறியியல் படிப்புகளைத் தொடர வாய்ப்புகளை வழங்குகிறது. இது வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கான மூன்று ஆண்டு கால படிப்பாகும். இது திறன்களிலும், தொழில்நுட்பங்களை செயல்படுத்துவதிலும் கவனம் செலுத்துகின்றன.

பின்வரும் இளங்கலை பட்டப்படிப்பு (B.Voc.) ஒருங்கிணைந்த கல்வியை அடிப்படையாகக் கொண்டவை. இரும்பை, ஆரோபிருந்தாவன், உதவி-சி3 லேண்ட் டிசைன் ஆகிய ஏஐஏடி வளாகங்களில் நடத்தப்படுகின்றன:

1. மென்பொருள் மேம்பாடு & மெஷின் லேர்னிங். (Software Development & Machine Learning)
2. எலக்ட்ரானிக்ஸ் மற்றும் எலக்ட்ரிக் டெக்னாலஜ், நிலையான ஆற்றல் உள்ளிட்டவை. (Electronics and Electric Technologies incl. Sustainable Energy)
3. மெகாட்ரானிக்ஸ் மற்றும் உற்பத்தி தொழில்நுட்பங்கள் (Mechatronics and Production Technologies)
4. அப்ளைடு எலக்ட்ரானிக்ஸ் மற்றும் சிப் டிசைன் (Applied Electronics and Chip Design)

5. தகவல் தொழில்நுட்பம் (Information Technology)
தொழில்துறை தளங்களில் இரண்டு மாதம்/ஆண்டு இன்டர்ன்ஷிப் திட்டத்தில் மாணவர்கள் தொழில்துறை சூழலில் பயிற்சி பெறுவார்கள், நிபுணர்களால் வழிநடத்தப்படுவார்கள்.

ஒருங்கிணைந்த கல்வியில் தீவிர தலைமையேற்று நடத்தும் மாற்றம், யோகா, தியானம், தகவல்தொடர்பு, தொழில்முனைவு, 3வது மொழியாக (இந்தி, ஜெர்மன் அல்லது பிரஞ்சு) ஆகியவை அடங்கும்.

பாடத்திட்டங்கள் ஏஐஏடியில் வடிவமைக்கப்பட்டு, பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டு, பாடத்திட்டத்தை சார்ந்த முக்கியமான தொடர்புடைய சிறிய பாடத்திட்டங்களிலும் கவனம் செலுத்துகிறது, இதன் விளைவாக பி.இ படிப்பை விட குறைந்த எண்ணிக்கையிலான பாடங்கள் உள்ளன. நிச்சயமாக இளங்கலை பட்டப்படிப்பு (B.Voc) இல் சேருவதன் முக்கிய நன்மை, பி.இ / பி.டெக் ஆகிய படிப்பிற்கு ஓரளவிற்கு சமமானதாகும்.

1. நான்கு ஆண்டுகளுக்குப் பதிலாக மூன்று ஆண்டுகளுக்கான இளங்கலைப் பட்டம்
2. 2 வாரங்களுக்குப் பதிலாக 6 மாத காலம் இன்டர்ன்ஷிப் & திட்டப்பணி
3. முதுகலை பட்டப்படிப்பிற்கான 4 ஆண்டு அல்லது 5 ஆண்டுக்கு பதிலாக மூன்று வருடங்களில் சிறப்பு தேர்ச்சி
4. தொடர்புடைய முக்கியமான சிறு பாடத்திட்டங்கள்
5. ஆரோவில்லில் உள்ளவர்களுக்கு இதற்கான கட்டணம் குறைவு
6. திறமையை மையமாகக் கொண்ட, திட்ட அடிப்படையிலான தொழில்துறை அனுபவம் உங்களை வேலைக்குத் /வேலை வாய்ப்புக்குத் தயார் படுத்துகிறது.
7. ஆரோவில் கலாச்சார நிகழ்ச்சியில் பங்கேற்பு
8. பேருந்து வசதிகள்
9. உதவித்தொகை அல்லது வங்கிக் கடனுக்கு விண்ணப்பிக்க ஏஐஏடி உங்களுக்கு உதவும்.

மேலும் தகவல் பெற தயவுசெய்து எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
ஆரோவில் இன்ஸ்டிடியூட் ஆப் அப்ளைடு டெக்னாலஜி-கல்லூரி
தொலைபேசி அல்லது வாட்ஸ்அப் எண்: 8903166923
இணையதளம்: aiat.in அல்லது ஆரோபிருந்தாவனில் உள்ள ஏஐஏடி வளாகத்தை நேரில் பார்வையிடவும்.
*லவ்கமட், சஞ்சீவ் ரங்கநாதன்*

---

## ஃபுட்லின்க் மார்க்கெட் (FOODLINK MARKET)

ஆரோவில் பண்ணைகளிலிருந்து பழங்கள், காய்கறிகள், பால், முட்டைகள்.
மே 17-18, வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை, காலை 10:00 - 12:30 மணி

ஃபுட்லின்க், சோலார் கிச்சன், கிரவுன் ரோடு, ஆரோவில்
அழைப்பு/வாட்ஸ்அப்: +91 83002 68804

பணப்பரிமாற்றம் இல்லை. அனைத்து கட்டணங்களும் ஆரோவில் நிதிச்சேவை கணக்கு, ஆரோகார்டு அல்லது யுபிஐ மூலம் செய்யப்பட வேண்டும்.

அன்பார்ந்த சமூகத்தவருக்கு,
வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் பிடிடிசி மூடப்படும் என்பதால், எங்களது ஃபுட்லின்க் மார்க்கெட் அந்த இரண்டு நாட்களிலும் காலை 10:00 மணி முதல் 12:30 மணி வரை திறந்திருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.
ஆரோவில் பண்ணைகளில் இருந்து புதிதாக உற்பத்தியான காய்கறிகள், பழங்கள், முட்டைகள், பால் ஆகியவற்றைப் பெற தயவுசெய்து ஃபுட்லின்க்-ஐப் பயன்படுத்தவும். *ஃபுட்லின்க் குழு.*
தொலைபேசி: 0413-3509946 | மொபைல்: +91 8300 268804 | ஃபுட்லிங்க் பேஸ்கெட் ஆர்டர் படிவம் இங்கே - Foodlink basket order form here



---

## M.வேல்முருகன் காலமானார் (M. Velmurugan Passed away)



அன்பு நண்பரும் மதுசூதனன் மகன் ம.வேல்முருகன் அவர்கள் மே 13 அன்று இரவு 9.30 மணியளவில் அவரது உடலை விட்டு நீங்கினார் என்பதை சமூகத்திற்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாருக்கு 53 வயது.

ஆரோவில் தொடக்கத்தில் இருந்தே தமது பெற்றோருடன் வேல்முருகன் அவர்கள் அதன் ஒரு பகுதியாக இருந்துள்ளார். அவரும் அவரது குடும்பத்தினரும் இலட்சுமிபுரத்தில் உள்ள ஜெய்மா குடியிருப்பில் சிறிது காலம் வசித்தனர். அப்போது ஆரோவில் யூனிட்டி பண்டில் அவர் கணக்காளராகப் பணிபுரிந்தார். பின்னர் அவர் 1996-இல் பிராமிஸுக்கு குடிபெயர்ந்தார், மேலும் கடந்த 25 ஆண்டுகளாக பிராமிஸ் குடியிருப்பின் பராமரிப்பாளராக இருந்தார்.
படிப்படியாக அவர் பிராமிஸில் விவசாயத்தில் ஈடுபட்டார், மேலும் அக்குடியிருப்பு மற்றும் அதைச் சுற்றியுள்ள மக்களுக்கு உதவியாக இருந்தார். கடந்த 8 ஆண்டுகளாக அவர் ஹெர்மிடேஜின் பராமரிப்பாளராக இருந்தார்.
14.05.2024 அன்று மாலை 4.30 மணிக்கு அவரது உடல் ஆரோவில் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

ஸ்ரீ அன்னையின் கரங்களில் அவரது ஆன்மா சாந்தியடையட்டும். நமது பணிவான பிரார்த்தனைகளும் அன்பும் ஆதரவும் அவரது மனைவி, குழந்தைகள் மற்றும் பேரக் குழந்தைகளுக்கு உரித்தாகுக. *~ஓம்~*